*MediaLiteracyCouncilSG*

**www.betterinternet.sg**



Organised by:

MEDIA LITERACY COUNCIL

Supported by:

INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY

In association with:

SG:D | GET READY!



## சாமர்த்தியமாக இருங்கள்

# போலிச் செய்தி வகைகள்



## இணையத்தில் சரியானதைக் கடைப்பிடியுங்கள்

- **செய்தி தோன்றுவதற்கான அடிப்படை (மூலம்)** பற்றிக் கேள்வி கேளுங்கள்
- **தகவலை** உறுதிப்படுத்துங்கள்
- **நிபுணர்களுடன்** சரிபாருங்கள்

**CHECK Please!**

Be Safe. Be Smart. Be Kind.



# நம்புவதற்கு, சொடுக்குவதற்கு முன்னால் தயவுசெய்து சரிபாருங்கள்!

**போலிச்செய்தி என்பது உண்மையில் என்ன, இணையவெளியில் அது எத்தனை வகைப்படும் என்பதைப் புரிந்து கொள்ளவும்.**

## 01 நையாண்டி

பிரச்சினைகளை மிகைப்படுத்தவும் கேலி செய்யவும் பயன்படுத்தப்படும் எழுத்துமுறை நையாண்டி எனப்படும். அதனைப் பெரிது படுத்தத் தேவையில்லை என்பது எப்போதும் புரிந்து கொள்ளக்கூடியது என்றபோதிலும் சிலர்- குறிப்பாக அந்த இணையத்தளம் குறித்து அறியாதவர் ஏமாற்றப்படலாம்.

## 02 திசைதிருப்பும் உள்ளடக்கம்

எழுதுபவர் உண்மையான தகவல்களைப் பயன்படுத்தி ஒருவரை அல்லது ஒரு பிரச்சினையை உண்மைக்குப் புறம்பானதாக சித்திரிக்கலாம். உதாரணமாக, "எல்லா ஆசிரியர்களுக்கும் 1000 வெள்ளி போனஸ்," என எழுதுபவருக்கு உரிமையோ அதிகாரமோ இல்லாதிருந்தாலும் கட்டுரையில் அவ்வாறு அறிவிக்கலாம்.

## 03 போலியான தொடர்பு

எழுதப்பட்டதிலிருந்து வேறுமாதிரியாக உங்களை நம்ப வைக்கக்கூடிய தலைப்புச் செய்தியோ, புகைப்படச் செய்தி விவரமோ போலியான தொடர்பை ஏற்படுத்தி விடக்கூடும். உதாரணமாக, " இவ்வாண்டு இறந்த 10 முக்கியஸ்தர்கள்," என்ற கட்டுரையில் உயிரோடு இருக்கும் ஒருவரது புகைப்படம் இடம் பெறலாம். இணையத்தளங்கள் அதிக எண்ணிக்கையிலான பார்வையாளர்கள் சொடுக்க வேண்டும் என்ற நோக்கில் இந்தத் தவறான தொடர்பைப் பயன்படுத்தக் கூடும்.

## 04 தவறான அமைப்பு

வேண்டுமென்றோ அறியாமலோ மக்கள் அளிக்கும் அறிக்கை மீதான பொய்யான தகவல்களை செய்தி அமைப்பில் பயன்படுத்துவதுண்டு. உதாரணத்துக்கு ஒரு விமர்சகர் எழுதிய, "இந்தத் திரைப்படம் எப்படி இவ்வளவு கொடுமையாக உருவானது என்பது எனக்கு மிகுந்த ஆச்சரியம்," என்ற பகுதியிலிருந்து விளம்பரப் பிரிவினர், "மிகுந்த ஆச்சரியம்," என்பதை மட்டும் எடுத்துப் போடக்கூடும்.

## 05 ஆள்மாறாட்ட உள்ளடக்கம்

இந்த மாதிரியான உள்ளடக்கத்தை வைத்து சிங்கப்பூரில் மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள். அரசாங்க இணையத் தளம் என்பது போன்ற பாவனையில் சில இணையத்தளங்கள் குடிமக்களின் அடையாள அட்டை, வங்கிக் கடனட்டை விவரங்கள் போன்றவற்றைப் பெறுகிறார்கள். பிரபல செய்திநிறுவனங்களைப் போலவும் போலியாக உருவாக்கப்படலாம். இணையத்தள முகவரியில் மிகச் சிறிய வேறுபாடு மட்டுமே இருக்கக்கூடும்.

## 06 திரிக்கப்பட்ட உள்ளடக்கம்

உண்மைச் செய்திகள் திரிக்கப்படலாம். ஆனால், இச்செயல் புகைப்படங்கள், காணொளிகளில் மிக அதிகமாகவே செய்யப்பட்டு வருகிறது. இடிந்து விழாத கட்டடங்கள் இடிந்து விழுவது போல அமைக்கப்படும் காணொளிகள் உட்பட மக்களின், இடங்களின் உண்மையான புகைப்படங்கள் திரிக்கப்படுவதுண்டு.

## 07 புரட்டுகள்

மக்களை ஏமாற்றுவதற்காக உள்ளடக்கத்தில் முற்றிலும் பொய்கள் கொண்ட செய்தியையே பொதுவாக போலிச்செய்தி என்கிறார்கள். அதிகமானோர் வாசிப்பவற்றை, அதுவும் முதல் முறை அவர்கள் அதைக் குறித்து அறியும்போது அவற்றை அதிகம் நம்பத் தலைப்படுவதால், பொய்ச் செய்திகள் மிக ஆபத்தானவை.